செ.வெ.எண்: 181

# பத்திரிக்கை செய்தி

நாள்: 10/03/2017

பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், சிறப்பு முகாம்கள் 11.03.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் இரவிபுதூர் பகுதிக்கு இரவிபுதூர் ஊராட்சி அலுவலகத்திலும், தோவாளை வட்டத்தில் பீமநகரி பகுதிக்கு பீமநகரி ஊராட்சி அலுவலகத்திலும், கல்குளம் வட்டத்தில் குமாரபுரம் பகுதிக்கு குமாரபுரம் பேரூராட்சி அலுவலகத்திலும், விளவங்கோடு வட்டத்திற்கு ஏழுதேசம் பகுதிக்கு ஏழுதேசம் பேரூராட்சி அலுவலகத்திலும் வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் மக்கள் குறைதீர் முகாம் 11.03.2017 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஊராட்சி, பேரூராட்சி பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், குடும்ப அட்டையில் பெயர் நீக்கல், சேர்த்தல், பெயர் திருத்தங்கள், முகவரி மாற்றம் மற்றும் குடும்ப அட்டையில் திருத்தம் செய்வதற்கும் மனுக்களை பொது மக்கள் அளித்து தீர்வு காணலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துக்கொள்கிறார்.

9/3/17

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
கன்னியாகுமரி மாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்